உ

செந்திலாண்டவன் துணை

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

அருளிய

# கந்தரலங்காரம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவுளப்பாங்கின்படி

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி Principal

வித்துவான் K. M. வேங்கடராமையா M.A., B.O.L., அவர்களால்

வெளியிடப்பெற்றது

1949

உ

செந்திலாண்டவன் துணை

# முன்னுரை

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன், செப்ப நா அமைத்தேன்,
வந்தனை செய்யத் தலை அமைத்தேன், கை தொழ அமைத்தேன்,
பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன், மெய் அரும்பவைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு இவை யான் விதித்தனவே.

இப் பொன் வண்ணத்தந்தாதியில் சேரமான் பெருமாள் நாயனார் பெறுதற்கரிய மக்கட் பிறவி எடுத்தவர்க்குரிய ஒழுகலாற்றை விதித்துள்ளார்கள். இம் முறையில் மக்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சிவாநுபூதிச் செல்வர்கள் அருளிய நூல்களுள் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய 'கந்தர் அலங்காரம்' என்பது ஒன்று.

இந்நூலில் முருகனைப்பாடுக என்றும், வாழ்த்துதல் வாயின் தொழில் என்றும், வணங்குதல் தலையின் தொழில் என்றும், திருப்புகழ் போற்றுதலே கற்றதனாலாய பயன் என்றும், அவனை வணங்கினால் இயமனுக்கு அஞ்சவேண்டியதில்லை என்றும், இம்மையே தரும் சோறும் (கூறையும்) என்றும், செல்வத்துப்பயன் ஈதல் என்றும், தொண்டர் குழாம் சார்க என்றும், வணங்கித் துதிக்க அறியா மனிதருடன் இணங்குதல் தகாது என்றும், முருகன் செந்தமிழ் நூல் விரித்தோன் என்றும், செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் என்றும் கூறியிருத்தல் அறியத்தகும்.

இத்தகைய சிறந்த நூலை எளிதிற் கற்று அறிதற் பொருட்டுக் கடின சந்திகளை நீக்கிக் குறிப்புரை எழுதி அச்

சிடும்பேறு எனக்குக் கிடைத்தது. வானவர்க்கு மேலான தேவன் புகழ் கூறும் இந்நூல் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள் நினைவு வெளியீடு ஆக வருவது மிகவும் பொருத்தமாம்.

இந்நூலிற் பல பாடல்களிலும் 'தானம் இடுங்கோள்' என்று பல்காலும் வற்புறுத்தப்பெற்றுள்ளது. இந்த அரிய சீரியசெயலை உண்மையில் செய்பவர்கள் சிலரே. அவருள் கொடையைக் கொடையின் பொருட்டுச் செய்துவருபவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் அவர்களேயாவர். மாரிபோல வரையா வள்ளன்மை பொருந்திய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் மூலையிலிருந்த என்னை முற்றத்தே விட்டு என்னால் இச் சிவபுண்ணியத்தைச் செய்வித்தமைக்கு மனமொழி மெய்களால் வந்தித்து வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

திருப்பனந்தாள், 31—3—49.

வித்துவான் கே. எம். வேங்கடராமையா, M.A., B. O. L.

உ
செந்திலாண்டவன் துணை

# கந்தரலங்காரம்

அடல் அருணைத் திருக்கோபுரத்தே அந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண்டேன்; வருவார் தலையில்
தடபடெனப் படுகுட்டுடன் சர்க்கரை மொக்கிய கைக்
கடதட கும்பக் களிற்றுக்கு இளைய களிற்றினையே.

பேற்றைத் தவம்சற்றும் இல்லாத என்னை, ப்ரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா! செஞ்சடாடவி மேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன், க்ருபாகரனே. 1

அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன்கவியை அன்பால்
எழுத்துப் பிழை யறக் கற்கின்றிலீர்; எரிமூண்டது என்ன
விழித்துப் புகையெழப் பொங்கு வெங்கூற்றன் விடும் கயிற்றால்
கழுத்தில் சுருக்கு இட்டு இழுக்குமன்றோ கவிகற்கின்றதே. 2

தேர் அணியிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில் வேல்
கூர் அணியிட்டு அணுவாகிக் கிரௌஞ்சம் குலைந்து அரக்கர்
நேர் அணியிட்டு வளைந்த கடகம் நெளிந்தது; சூர்ப்
பேரணி கெட்டது; தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே. 3

ஓரவொட்டார்; ஒன்றை உன்னவொட்டார்; மலர்இட்டு உனதாள்
சேரவொட்டார் ஐவர்; செய்வதென்யான சென்று; தேவர்
சோரிட்டுமனச் சூரனைக் காருடல் சோரி கக்கக் [உய்யச்
கூரகட்டாரி இட்டு ஓர் இமைப்போதினில் கொன்றவனே! 4

திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச், சரவணப் பூந்தொட்டில் ஏறி, அறுவர் கொங்கை
விரும்பிக், கடல்அழக் குன்றழச் சூர்அழ விம்மிஅழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன் என்று ஓதும் குவலயமே. 5

பெரும் பைம்புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை, மெய்யன்பினால் மெல்லமெல்ல உள்ள
அரும்பும் தனிப் பரமானந்தம்; தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்துஅறக் கைத்ததுவே. 6

சளத்தில் பிணிபட்டு அசட்டு க்ரியைக்குள் தவிக்கும் என்றன்
உளத்தில் ப்ரமத்தைத் தவிர்ப்பாய்; அவுணர் உரத்து உதிரக்
குளத்தில் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்து வெற்றிக்
களத்தில் செருக்கிக் கழுது ஆட வேல்தொட்ட காவலனே! 7

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின்மேல்
அளியில் விளைந்ததொர் ஆனந்தத் தேனை, அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்பெற்ற வெறுந் தனியைத்
தெளிய விளம்பியவா! முகம் ஆறுடைத் தேசிகனே! 8

தேனென்று பாகென்று உவமிக்கொணா மொழித் தெய்வ வள்ளி
கோன், அன்று எனக்கு உபதேசித்தது ஒன்றுண்டு; கூறவற்றோ?
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணும் அன்று
தானன்று நானன்று அசரீரியன்று சரீரி அன்றே. 9

சொல்லுகைக்கில்லை என்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும்
எல்லையுள் செல்ல எனை விட்டவா! இகல் வேலன், நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக், கல்வரைகொவ்வைச்
[செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத்தோள் அண்ணல்வல்லபமே.

குசை நெகிழா வெற்றி வேலோன் அவுணர் குடர் குழம்பக்
கசையிடு வாசி விசை கொண்ட வாகனப் பீலியின் கொத்து
அசைபடு கால்பட்டு அசைந்தது மேரு; அடியிட எண்
திசைவரை தூள்பட்ட; அத்தூளின் வாரி திடர்பட்டதே! 11

படைபட்ட வேலவன்பால் வந்த வாகைப் பதாகை என்னும்
தடைபட்ட சேவல் சிறகு அடிக்கொள்ளச் சலதி கிழிந்து
உடைபட்டது அண்ட கடாகம்; உதிர்ந்தது உடுபடலம்;
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே. 12

ஒருவரைப் பங்கில் உடையாள் குமாரன் உடை மணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசைபடத் திடுக்கிட்டு, அரக்கர்
வெருவரத், திக்குச் செவிடுபட்டு, எட்டுவெற்பும் கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன; தேவர்பயம் கெட்டதே. 13

குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும் ஐவரில் கொட்பு அடைந்த
இப் பாச நெஞ்சனை ஈடேற்றுவாய்; இருநான்கு வெற்பும்
அப் பாதியாய்விழ, மேரும் குலுங்க, விண்ணாரும் உய்யச்
சப்பாணி கொட்டிய கை ஆறிரண்டுடைச் சண்முகனே! 14

தாவடி ஓட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என்
பாவடி ஏட்டிலும் பட்டது அன்றோ! படி மாவலிபால்
மூவடி கேட்டு அன்று மூதண்ட கூடமுகடு முட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்தன் சிற்றடியே. 15

தடுங்கோள் மனத்தை; விடுங்கோள் வெகுளியை; தானம் என்றும்
இடுங்கோள்; இருந்தபடி இருங்கோள்; எழுபாரும் உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம் திறக்கத் துளைக்க வைவேல்
விடும் கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே. 16

வேதாகம சித்ர வேலாயுதன் வெட்சி பூத்த தண்டைப்
பாதாரவிந்தம் அரணாக, அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா இருக்கப்
போதாய், இனி மனமே! தெரியாது ஒரு பூதர்க்குமே. 17

வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி, வறிஞர்க்கு என்றும்
நொய்யில் பிளவு அளவேனும் பகிர்மின்கள்; நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறு நிழல்போல்
கையில் பொருளும் உதவாதுகாண்; நும் கடைவழிக்கே. 18

சொன்ன கிரௌஞ்சகிரி ஊடுருவத் துளைத்த வைவேல்
மன்ன! கடம்பின் மலர் மாலை மார்ப! மௌனத்தை யுற்று
நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்துஇருந்தேன்; இறந்தே விட்டது இவ்வுடம்பே.

கோழிக்கொடியன் அடி பணியாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள்! உங்கள் வல்வினை நோய்
ஊழிற் பெருவலி உண்ணவொட்டாது உங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால் வருமோ நும் அடிப் பிறகே. 20

மரணம் ப்ரமாதம் நமக்கு இல்லையாம்; என்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும் உண்டே; கிங்கிணி முகுள
சரண! ப்ரதாப! சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா
பரண! க்ருபாகர! ஞானகர! சுர! பாஸ்கரனே! 21

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழ வைப்போன், வெய்ய வாரணம்
கைதான் இருபது உடையான் தலை பத்தும் கத்தரிக்க [போல்
எய்தான் மருகன், உமையாள் பயந்த இலஞ்சியமே. 22

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே!
வைவைத்த வேற்படை வானவனே! மறவேன் உனை நான்;
ஐவர்க்கு இடம்பெறக் கால் இரண்டு ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே. 23

கின்னம் குறித்து அடியேன் செவி நீ அன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது; கோடு குழல்
சின்னம் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமி தனை
முன்னம் குறிச்சியில் சென்று கல்யாணம் முயன்றவனே! 24

தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன்; செந்தில் வேலவனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா! வந்துபார் சற்று என் கைக்கு எட்டவே. 25

நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்; குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார் சிவயோகிகளே
காலத்தை வென்று இருப்பார்; மரிப்பார் வெறும் கர்மிகளே.

ஓலையும் தூதரும் கண்டு திண்டாடல் ஒழித்து எனக்குக்
காலையும் மாலையும் முன் நிற்குமே! கந்தவேள் மருங்கில்
சேலையும், கட்டிய சீராவும், கையில் சிவந்த செச்சை
மாலையும், சேவல் பதாகையும், தோகையும் வாகையுமே. 27

வேலை விளங்கு கையான் செய்ய தாளினில் வீழ்ந்து இறைஞ்சி
மாலே கொள இங்ஙன் காண்பதல்லால், மனம் வாக்குச் செய
லாலே அடைதற்கு அரிதாய், அரு உருவாகி, ஒன்று
போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வதுவே? 28

கடத்தில் குறத்திபிரான் அருளால் கலங்காத சித்தத்
திடத்தில் புணை என யான்கடந்தேன்; சித்ரமாதர் அல்குல்
படத்தில் கழுத்தில் பழுத்த செவ்வாயில் பணையில் உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெம் காம சமுத்திரமே. 29

பால் என்பது மொழி, பஞ்சு என்பது பதம், பாவையர்கண்
சேல் என்பதாகத் திரிகின்ற நீ, செந்திலோன் திருக்கை
வேல் என்கிலை; கொற்ற மயூரம் என்கிலை; வெட்சித் தண்டைக்
கால் என்கிலை; மனமே! எங்ஙனே முத்தி காண்பதுவே? 30

பொக்கக் குடிலிற் புகுதாவகைப் புண்டரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்; சிந்துவெந்து
கொக்குத் தறிபட்டு எறிபட்டு உதிரம் குமுகுமெனக்
கக்கக் கிரியுருவக் கதிர்வேல் தொட்ட காவலனே! 31

கிளைத்துப் புறப்பட்ட சூர் மார்புடன் கிரிஊடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேல் கந்தனே! துறந்தோர் உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்கும் கண்ணார்க்கு
இளைத்துத் தவிக்கின்ற என்னை எந்நாள் வந்து இரட்சிப்பையே? 32

முடியாப் பிறவிக் கடலில் புகார்; முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார்; வெற்றிவேல் பெருமாள்,
அடியார்க்கு நல்ல பெருமாள், அவுணர் குலம் அடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே. 33

பொட்டாக வெற்பைப் பொருத கந்தா! தப்பிப்போனது ஒன்றற்கு
எட்டாத ஞான கலை தருவாய்; இரும் காமவிடாய்ப்
பட்டார் உயிரைத் திருகிப் பருகிப் பசி தணிக்கும்
கட்டாரி வேல் விழியார் வலைக்கே மனம் கட்டுண்டதே. 34

பத்தித் துறை இழிந்து ஆனந்த வாரி படிவதனால்
புத்தித் தரங்கம் தெளிவது என்றோ? பொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூரனை விட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண்டு அமராவதி கொண்ட கொற்றவனே! 35

சுழித்தோடும் ஆற்றில் பெருக்கானது செல்வம்; துன்பம் இன்பம்
கழித்து ஓடுகின்றது எக்காலம்? நெஞ்சே! கரிக்கோட்டு முத்தைக்
கொழித்து ஓடு காவிரிச் செங்கோடன் என்கிலை; குன்றம் எட்டும்
கிழித்து ஓடு வேல் என்கிலை; எங்ஙனே முத்தி கிட்டுவதே? 36

கண்டு உண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டு உண்டு அயர்கினும், வேல் மறவேன்; முதுகூளித்
டுண்டுண் டுடுடுடு டுடு டுடுடுடு டுண்டு டுண்டு [திரள்
டிண் டிண்டு எனக் கொட்டி ஆட, வெஞ்சூர்க்கொன்ற ராவுத்தனே!

நாள் என்செயும்? வினைதான் என் செயும்? எனை நாடி வந்த
கோள் என்செயும்? கொடுங்கூற்று என்செயும்? குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே! 38

உதித்து ஆங்கு உழல்வதும் சாவதும் தீர்த்து எனை உன்னில் ஒன்றா
விதித்து ஆண்டு அருள்தரும் காலம் உண்டோ? வெற்பு நட்டு, உரக
பதித் தாம்பு வாங்கி நின்று அம்பரம் பம்பரம் பட்டு உழல
மதித்தான் திருமருகா! மயில் ஏறிய மாணிக்கமே! 39

சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயல் பொழில்; தேன்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம்; மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்; அவன்
கால்பட்டு அழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே. 40

பாலே அனைய மொழியார்தம் இன்பத்தைப்பற்றி என்றும்
மாலே கொண்டு, உய்யும் வகை அறியேன்; மலர்த்தாள் தரு-
காலே மிகவுண்டு காலே இலாத கணபணத்தின் [வாய்;
மேலே துயில் கொள்ளும் மாலோன் மருக! செவ் வேலவனே!

கிணம் காட்டும் கொட்டிலை விட்டு ஒருவீடு எய்தி நிற்க நிற்கும்
குணம் காட்டி ஆண்ட குருதேசிகன், நம் குறச்சிறுமான்
பணம் காட்டும் அல்குற்கு உருகும் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்து இது எங்கே எனக்கு இங்ஙன் வாய்த்ததுவே! 42

கவியால் கடல் அடைத்தோன் மருகோனைக், கணபணக்கட்
செவியால் பணி அணி கோமான் மகனைத், திறல் அரக்கர்
புவி ஆர்ப்பு எழத்தொட்ட போர்வேல் முருகனைப், போற்றி அன்பால்
குவியாக் கரங்கள் வந்து எங்கே எனக்கு இங்ஙன் கூடியவே! 43

தோலால் சுவர்வைத்து, நாலாறு காலில் சுமத்தி, இரு
காலால் எழுப்பி வளை முதுகு ஓட்டிக், கை நாற்றி நரம்
பால் ஆர்க்கை இட்டுத், தசைகொண்டு மேய்ந்த அகம் பிரிந்தால்
வேலால் கிரி தொளைத்தோன் இருதாள் அன்றி வேறு இல்லையே. 44

ஒரு பூதரும் அறியாத் தனிவீட்டில் உரை உணர்வு அற்று
இரு, பூத வீட்டில் இராமல் என்றான்; இரு கோட்டு ஒருகைப்
பொரு பூதரம் உரித்து ஏகாசம் இட்ட புராந்தகற்குக்
குரு, பூதன், வேலவன், நிட்டூர சூர குலாந்தகனே. 45

சீயான ஞான விநோதம் தனை என்று நீ அருள்வாய்?
சேயான வேல் கந்தனே! செந்திலாய்! சித்ரமாதர் அல்குல்
தோயா உருகிப் பருகிப் பெருகித் துவளும் இந்த
மாயா விநோத மனோதுக்கம் ஆனது மாய்வதற்கே. 46

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிருதோள்களுமாய்த்
தித்தித்து இருக்கும் அமுது கண்டேன் ; செயல் மாண்டு அடங்கப்
புத்திக் கமலத்து உருகிப் பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரை புரளும் பரமானந்த சாகரத்தே. 47

புத்தியை வாங்கி நின் பாதாம்புயத்தில் புகட்டி அன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றிலேன் ; முதுசூர் நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ? குவடு தவிடுபடக்
குத்திய காங்கேயனே! வினையேற்கு என்குறித்தனையே ? 48

சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன் தொண்டர் குழாம்
சாரில் கதியன்றி வேறு இலை காண்; தண்டு தாவடி போய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வம் எல்லாம்
நீரில் பொரி என்று அறியாத பாவி நெடு நெஞ்சமே ! 49

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்; கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் ; பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா! கொடும் சூரன் நடுங்க வெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே! 50

மலை ஆறுகூறு எழ வேல் வாங்கினானை வணங்கி அன்பின்
நிலையான மாதவம் செய்குமினோ; நம்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதி சோறும்; உற்ற துணையும் கண்டீர்
இலையாயினும் வெந்தது ஏது ஆயினும் பகிர்ந்து ஏற்றவர்க்கே.

சிகராத்ரி கூறுஇட்ட வேலும் செஞ்சேவலும் செந்தமிழால்
பகர் ஆர்வம் ஈ; பணி பாச, சங்க்ராம பணாமகுட
நிகராட்சம பட்ச பட்சிதுரங்க! ந்ருப குமரா!
குக! ராட்சச பட்ச விட் சோப! தீர! குணதுங்கனே ! 52

வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை, மெய்யன்பினால்
பாடிக், கசிந்து உள்ளபோதே கொடாதவர், பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டில் கொடுத்துத் திகைத்து இளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே. 53

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றித் தளர்ந்தவர்க்கு ஒன்று
ஈகைக்கு எனை விதித்தாய் இலையே; இலங்காபுரிக்குப்
போகைக்கு நீ வழிகாட்டு என்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலை வளைத்தோன் மருகா! மயில் வாகனனே! 54

ஆங்காரமும் அடங்கார், ஒடுங்கார், பரம ஆனந்தத்தே
தேங்கார், நினைப்பும் மறப்பும் அறார், தினைப்போது அளவும்
ஓங்காரத்து உள் ஒளிக்கு உள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார், தொழும்பு செய்யார் என் செய்வார்? யம தூதருக்கே. 55

கிழியும்படி அடல் குன்று எறிந்தோன் கவி கேட்டு உருகி
இழியும் கவி கற்றிடாது இருப்பீர்! எரிவாய் நரகக்
குழியும் துயரும் விடாய்ப்படக் கூற்றுவன் ஊர்க்குச் செல்லும்
வழியும் துயரும் பகரீர்; பகரீர் மறந்தவர்க்கே. 56

பொருபிடியும் களிறும் விளையாடும் புனச்சிறுமான்
தரு பிடி காவல்! சண்முகவா! எனச் சாற்றி நித்தம்
இரு, பிடி சோறுகொண்டு இட்டு உண்டு இரு; வினையோம் [இறந்தால்
ஒரு பிடி சாம்பரும் காணாது; மாய உடம்பு இதுவே. 57

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற்கு இனியபிரான், இக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து சங்க்ராம வேளும் பட விழியால்
செற்றார்க்கு இனியவன், தேவேந்த்ர லோக சிகாமணியே. 58

பொங்கார வேலையில் வேலைவிட்டோன் அருள்போல் உதவ
எங்கு ஆயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது; இடாமல்வைத்த
வங்காரமும் உங்கள் சிங்கார வீடும் மடந்தையரும்
சங்காதமோ? கெடுவீர் உயிர்போம் அத் தனிவழிக்கே. 59

சிந்திக்கிலேன், நின்று சேவிக்கிலேன், தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன், ஒன்றும் வாழ்த்துகிலேன், மயில் வாகனனைச்
சந்திக்கிலேன், பொய்யை நிந்திக்கிலேன், உண்மை சாதிக்கிலேன்,
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே. 60

வரை அற்று அவுணர்சிரம் அற்று வாரிதி வற்றச் செற்ற
புரை அற்ற வேலவன் போதித்தவா! பஞ்ச பூதமும் அற்று
உரை அற்று உணர்வு அற்று உடல் அற்று உயிர் அற்று உபாயம் அற்றுக்
கரை அற்று இருள் அற்று எனது அற்று இருக்கும் அக்காட்சியதே. 61

ஆலுக்கு அணிகலம் வெண்டலை மாலை; அகிலம் உண்ட
மாலுக்கு அணிகலம் தண் அம்துழாய்; மயில் ஏறும் ஐயன்
காலுக்கு அணிகலம் வானோர் முடியும் கடம்பும்; கையில்
வேலுக்கு அணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே. 62

பாதித் திருவுருப் பச்சென்றவர்க்குத் தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வேலனைச் சென்று போற்றி உய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ? அழுது தொழுது உருகிச்
சாதித்த புத்தி வந்து எங்கே எனக்கு இங்ஙன் சந்தித்ததே. 63

பட்டிக் கடாவில் வரும் அந்தகா! உனைப் பார் அறிய
வெட்டிப் புறங்கண்டலாது விடேன்; வெய்ய சூரனைப் போய்
முட்டிப் பொருத செவ்வேல் பெருமாள் திருமுன்பு நின்றேன்;
கட்டிப் புறப்படடா! சத்தி வாள் என்றன் கையதுவே. 64

சேல் வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரம் சேர எண்ணி
மால் வாங்கி ஏங்கி மயங்காமல், வெள்ளிமலை எனவே
கால் வாங்கி நிற்கும் களிற்றான் கிழத்தி கழுத்தில் கட்டும்
நூல் வாங்கிடாது அன்று வேல் வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே!

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல் ஏற்றம் கொண்டாடுவீர்காள்!
போர்கொண்ட காலன் உமைக் கொண்டுபோம் அன்று பூண்பனவும்
தார்கொண்ட மாதரும் மாளிகையும் பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவர்? ஐயோ கெடுவீர்! நும் அறிவின்மையே. 78

பந்தாடு மங்கையர் செங்கயல் பார்வையில் பட்டு உழலும்
சிந்தாகுலம் தனைத் தீர்த்தருள்வாய்; செய்ய வேல் முருகா!
கொந்து ஆர் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றில் நிற்கும்
கந்தா! இளம் குமரா! அமராவதி காவலனே! 79

மாகத்தை முட்டி வரும் நெடுங்கூற்றன் வந்தால் என் முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்; சுத்த நித்த முத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி தன் பாலகனே! 80

தாராகணம் எனும் தாய்மார் அறுவர் தரும் முலைப்பால்
ஆராது, உமை முலைப்பால் உண்டபாலன், அரையில் கட்டும்
சீராவும் கையில் சிறு வாளும் வேலும் என் சிந்தையவே;
வாராது அகல், அந்தகா! வந்தபோது உயிர் வாங்குவனே. 81

தகட்டில் சிவந்த கடம்பையும் நெஞ்சையும் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருள்வாய்; புண்டரீகன் அண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்து இந்த்ர லோகத்தை முட்ட எட்டிப்
பகட்டில் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே! 82

தேங்கிய அண்டத்து இமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள், கலாபப் புரவி மிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளம்; தனிவேல்
வாங்கி அனுப்பிடக் குன்றங்கள் எட்டும் வழிவிட்டவே. 83

'மைவரும் கண்டத்தர் மைந்த! கந்தா!' என்று வாழ்த்தும் இந்தக்
கைவரும் தொண்டு அன்றி மற்று அறியேன்; கற்ற கல்வியும் போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப், பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு, மெய்விடும்போது உன் அடைக்கலமே. 84

காட்டில் குறத்திபிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டில் புகுதல் மிக எளிதே; விழி நாசி வைத்து
மூட்டிக் கபாலம் மூலாதாரம் நேரண்ட மூச்சை யுள்ளே
ஓட்டிப் பிடித்து எங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே! 85

வேலாயுதன், சங்கு சக்ராயுதன் விரிஞ்சன் அறியாச்
சூலாயுதன் தந்த கந்தச்சுவாமி, சுடர்க் குடுமிக்
காலாயுதக் கொடியோன் அருள் ஆய கவசம் உண்டு; என்
பால் ஆயுதம் வருமோ? யமனோடு பகைக்கினுமே. 86

'குமரா! சரணம் சரணம்' என்று அண்டர்குழாம் துதிக்கும்
அமராவதியில் பெருமாள் திருமுகம் ஆறும் கண்ட
தமர் ஆகி வைகும் தனியான ஞான தபோதனர்க்கு இங்கு
எமராசன் விட்ட கடையேடு வந்து இனி என் செயுமே? 87

வணங்கித் துதிக்க அறியா மனிதருடன் இணங்கிக்
குணம் கெட்ட துட்டனை ஈடேற்றுவாய்; கொடியும் கழுகும்
பிணங்கத் துணங்கை அலகை கொண்டாடப் பிசிதர்தம் வாய்
நிணம் கக்க விக்ரம வேலாயுதம் தொட்ட நிர்மலனே! 88

பங்கேருகன் எனைப் பட்டோலையில் இடப் பண்டு தளை
தம் காலில் இட்டது அறிந்திலனோ? தனிவேல் எடுத்துப்
போங்கு ஓதம் வாய்விடப் பொன்னம் சிலம்பு புலம்ப வரும்
எங்கோன் அறியின் இனி நான்முகனுக்கு இருவிலங்கே. 89

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேல் ஆர் வயல் பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண் படைத்திலனே! அந்த நான்முகனே. 90

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவு கொண்டு
வரு மாகுலவனைச் சேவல் கைக் கோளனை வானம் உய்யப்
பொரு மாவினைச் செற்ற போர் வேலனைக் கன்னிப் பூகமுடன்
தரு மா மருவும் செங்கோடனை வாழ்த்துகை சாலநன்றே. 91

தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த ஞானம்
தண்டை அம் புண்டரிகம் தருவாய்; சண்டதண்ட வெஞ்சூர் [எனும்
மண்டலம் கொண்டு பண்டு அண்டர் அண்டம்கொண்டு மண்டி
[மிண்டக்
கண்டு உருண்டு அண்டர் விண்டு ஓடாமல் வேல்தொட்ட காவலனே!

மண் கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசை அந்த
விண் கமழ் சோலையும் வாவியும் கேட்டது; வேல் எடுத்துத்
திண் கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையில்
கிண்கிணி ஓசை பதினாலுலகமும் கேட்டதுவே. 93

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமி எனும்
வள்ளியை வேட்டவன் தாள் வேட்டிலை; சிறுவள்ளை தள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச்சொல்லை
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்ட நெஞ்சே. 94

யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டால் அன்றி யாவருக்கும்
தோன்றாது, சத்தியம்; தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன் க்ருபாகரன் கேள்வியினால்
சான்றாரும் அற்ற தனிவெளிக்கே வந்து சந்திப்பதே. 95

தடக் கொற்றவேள் மயிலே! இடர் தீரத் தனிவிடில் நீ
வடக்கில் கிரிக்கு அப்புறத்து நின்று ஓகையின் வட்டமிட்டுக்
கடற்கு அப்புறத்தும் கதிர்க்கு அப்புறத்தும் கனக சக்ரத்
திடர்க்கு அப்புறத்தும் திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே!

சேலில் திகழ் வயல் செங்கோடை வெற்பன் செழுங் கலபி
ஆலித்து அனந்தன் பணாமுடி தாக்க, அதிர்ந்து அதிர்ந்து
காலில் கிடப்பன; மாணிக்க ராசியும், காசினியைப்
பாலிக்கும் மாயனும், சக்ராயுதமும், பணிலமுமே. 97

கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன்; கந்த! வேல்முருகா!
நதிதனை அன்ன பொய்வாழ்வில் அன்பாய் நரம்பால் பொதிந்த
பொதிதனையும் கொண்டு திண்டாடுமாறு எனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந்து இங்கே என்றன் மனம் வேகின்றதே.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்து எனைக் காத்தருள்வாய்,
தூவிக் குலமயில் வாகனனே! துணை ஏதும் இன்றித்
தாவிப் படரக் கொழுகொம்பு இலாத தனிக் கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே. 99

இடுதலைச் சற்றும் கருதேனைப் போதம் இலேனை அன்பால்
கெடுதல் இலாத் தொண்டரில் கூட்டியவா! கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன்; பிறவி அற, இச்சிறை
விடுதலைப்பட்டது; விட்டது பாச வினை விலங்கே. 100

## நூற் பயன்

சலம் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்; யமன் சண்டைக்கும்
[அஞ்சார்;
துலங்கா நரகக் குழி அணுகார்; துட்ட நோய் அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்; கந்தன் நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவிதான் கற்று அறிந்தவரே.

செந்திலாண்டவன் துணை

# கந்தரலங்காரம்—குறிப்புரை

காப்புச் செய்யுள் :—மொக்கிய - ஏற்றுக்கொண்ட. கடம்-மதம். தட - பெரிய. கும்பக்களிறு - மத்தகத்தையுடைய யானை. இளைய களிறு-முருகன்.

1. ப்ரபஞ்சம் - உலகவாழ்க்கை. சடாடவி - சடைக் காடு. பணி - பாம்பு. இதழி - கொன்றை. அம்புலியின் கீற்று - பிறைச் சந்திரன். க்ருபாகரன் - கருணைக்கு இடமானவன்.

2. அயில் - கூர்மை. வேலன்கவி - முருகன் புகழ்நூல்கள். கூற்றன் - இயமன். கழுத்தில் சுருக்கு இட்டு இழுக்கும் அன்று - சாகுந்தறுவாயில் என்றபடி.

3. புரம் எரித்தான் - சிவபெருமான். கடகம் - நாடு. சூர் - சூரபதுமன். பேராணி - சேனை.

4. ஐவர் - பஞ்சேந்திரியங்கள். நிட்டூரன் - சினம் பொருந்தியவன். சோரி - இரத்தம். தேவரைச் சூர்ப் பகையினின்று மீட்ட முருகன் என்னையும் இந்த ஐவர் பகையினின்று மீட்பான் என்றபடி. கட்டாரி - வேல்.

5. புவனங்கள் ஈன்ற பொற்பாவை - உமை. அறுவர் - கார்த்திகை மாதர் அறுவர். குருந்து - குழந்தை. குறிஞ்சிக் கிழவன் - மலை கிழவோன் - மலைக்கு உரிமை யுடையோன். சரவணம் - நாணல் நிறைந்த பொய்கை. பாவை திருமுலைப்

பாலை விரும்பி என்றும், அறுவர் கொங்கை அருந்தி அழும் என்றும் கூட்டுக. அறுவர் கொங்கை அருந்தி அழுத அழுகை கிரௌஞ்சமும் சூரனும் அழிதற்குக் காரணமாயிற்று என்க. குழந்தையை (குருந்தை)க் கிழவன் என்று கூறியதில் நயம் காண்க.

6. முதலடியில் முரண்தொடை நயம் காண்க. ஏனல் காக்கின்ற பேதை - வள்ளியம்மையார். குமரனை நினைக்க நினைக்க அரும்பிய ஆனந்தம் இவ்வுலகத்தில் இனிமைதரும் எல்லாப் பொருள்களினும் மிக்கு இனிக்கும் என்றார். "கனியினும் கட்டிபட்ட கரும்பினும்.............இனியன்" என்ற அப்பர் தேவாரமும், 'நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத் தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்' என்ற மணிவாசகமும் ஓர்க.

7. சளம் - பொய். அசட்டுக் கிரியை - அகலிடத்தார் ஆசாரம். ப்ரமம் - கலக்கம். உதிரம் - இரத்தம். கழுது - பேய். பூதரம் - மலை. மூன்றாவதடியின் ஓசை நயம் ஓர்க.

9. முருகன் உபதேசித்ததைக் கந்தர் அநுபூதியில் 'அமரும்பதி, கேள், அகம் ஆம் எனும் இப்பிமராம் கெட மெய்ப்பொருள் பேசியவா!' (பாட்டு 8) என்றும்; 'அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன் உரிதா உபதேசம் உணர்த்தியவா' (பாட்டு 20) என்றும் அருளியது காண்க. உபதேச மொழி 'சும்மா இரு சொல்லற' என்பதுவேயாம் (அநுபூதி 12). இந்நூல் 45ம் பாட்டில் 'உரை உணர்வற்றிரு' என்பதும் காண்க. பின் இரண்டடிகளில் இறைவனது சிறப்பியல் கூறப்பெற்றது. 'விரிகதிர் ஞாயிறல்லர்' என்ற அப்பர் தேவாரக் கருத்தும் இதுவே. 'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்.................என்றெழுதிக் காட்டொணாது'

ஆதலின் 'கூறவற்றோ' என்றார். அசரீரி - உருவமில்லாதது. சரீரி - உருவமுடையது.

10. சொல்லுகைக்கு-சொல்லுவதற்கு. உபதேசத்தால் தான் அடைந்த இடத்தைச் 'சும்மா இருக்கும் எல்லை' என்றார். கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லி - கொல்லிப்பண் போன்ற சொற்களையுடையவள்; தெய்வயானை. கல்வரை-மலை. கொவ்வைச் செவ்வாய் வல்லி - வள்ளியம்மை. வல்லி-கொடி. வரைத்தோள் - மலைபோலும் தோள். வல்லபம் - வல்லமை.

11. குசை - கடிவாளம். குசை நெகிழா வாசி என்க. வாசிவிசை கொண்ட வாகனம் - குதிரையின் விரைவுடைய மயில் ஊர்தி. பீலி - மயில் பீலி. கால் - காற்று. எண்திசை-எட்டுத் திக்கு. வாரி - கடல். திடர் - மேடு. மயில் வாகனத்தின் திறன் கூறியவாறு.

12. வாகைப் பதாகை - வெற்றிக்கொடி. சலதி - கடல். உடுபடலம்-நக்ஷத்திரக் கூட்டம். சேவல் கொடியின் பெருமை கூறியவாறு. அண்டகடாகம் - அண்டகோளத்தின் மேல் ஓடு.

13. ஒருவர் - சிவபெருமான். உடையாள் - உமை. வெற்பு-மலை. கனகப்பருவரை - மேருமலை. முருகன் அணிந்த கிண்கிணியின் பெருமை கூறியவாறு.

14. கு - உலகு; சௌட்பு - சுழற்சி. நெஞ்சனை-நெஞ்சையுடைய என்னை. சப்பாணி கொட்டிய - கைகொட்டிய. திருக்கைகளின் சிறப்புக் கூறியவாறு.

15. தாவடி - போர். படி - உலகம். மாவலி-மஹாபலி. மூதண்டம் - முதியவானம். முகடு உச்சி........சேவடி நீட்டும் பெருமான்- திருமால். முருகன் திருவடிச்சிறப்புக் கூறியவாறு.

16. இறை அருள் வந்து எய்துவதற்கு எளிய உபாயம் கூறியவாறு. 'உறு கயிறூசல் போல ஒன்றைவிட்டு ஒன்று பற்றும்' ஆதலின் தடுங்கோள் மனத்தை என்றூர். "இருந்த படி இருங்கோள்' என்றது, 'சும்மா இரு சொல்லற' என்னும் நினைவிற்று. குன்றம் - கிரௌஞ்சம். வை - கூர்மை.

17. பாதாரவிந்தம் - திருவடித்தாமரை. அல் - இரவு. சூதானது அற்ற விடம் - தூயஞானப் பெருவெளி. பூதர்-உலகோர். 'சும்மா இரு' என்ற உபதேசம் இங்கு மனத்திற்கு வற்புறுத்தப்பெற்றது.

18. கதிர் - ஒளி. வறிஞர் - ஏழை. நொய்யில் பிளவு- சிறிது என்றபடி. பகிர்மின்கள் - கொடுக்கவும். மேல் 16வது பாடலில் 'தானம் என்றும் இடுங்கோள்' என்றவர் இப்பாடலில் 'சிறிது அளவு ஆயினும் அறம் செய்க' என்றூர். செல்வத்துப் பயன் ஈதல் என்றவாறு. கடைவழி - மரணத்தின்பின் உயிர் செல்லும் வழி. 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே'.

19. உபதேசித்ததைக் கடைப்பிடித்தமையின் இவ்வுடற் சுமை நீங்கியது கூறியவாறு.

20. கோழிக்கொடியன் - முருகன். அத்தம்-பொருள். பொருள் இருப்பினும் ஊழ் இல்லையாயின் அதனை அனுபவிக்க முடியாது என்று 3வது அடியில் குறித்தார். வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்ற குறளும் காண்க. பின்னுல் உதவும் என்று புதைத்து வைத்தாலும், செய்த வினை உடன்வருமேயன்றிப், புதைத்துவைத்த அப்பணம் உதவாது என்று கூறித் 'தானத்தை இடுங்கோள்' என்ற கருத்தை இப்பாடலிலும் வற்புறுத்

தினர். 'புணமே பத்தும் செய்யும், இறைவன் எற்றுக்கு?' என்னும் இயற்கைவாதிகளை நோக்கிக் கூறியது இப்பாட்டு. வருமோ நும் அடிப்பிறகே - நும்முடன் வருமோ என்றபடி.

21. வேலும் மயிலும் துணை யிருப்பதால் இறப்பு நமக்கு இல்லை என்றார். இறப்பு இல்லை எனவே ஞானம் பெற்று வீடு பெறலாம் என்றபடி. கிரணக்கலாபி - மயில். முகுள சரண - தாமரை போலும் திருவடியையுடையோய். ப்ரதாப - பெருமையுடையோய். சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரண - இந்திராணியின் மங்கல்யத்தைக் காத்தவனே. மங்கல்யதந்து - தாலிக்கயிறு. க்ருபாகர - கருணைக்கு உறைவிடம் ஆனவனே. ஞானகர - ஞானத்துக்கு உறைவிடமானவனே. சுர - தேவனே. பாஸ்கரனே—(ஞான)சூரியனே.

22. வாரணம் - யானை. கைதான் இருபது உடையான் - இராவணன். எய்தான் - இராமன் (திருமால்). இலஞ்சியம் - நீர் நிலைபோன்றவன்.

23. வீடு - உடல்.

24. கின்னம் - துன்பம். குன்னம் - பழி. குறிச்சி - மலைநாட்டூர். கோடு - ஊது கொம்பு. குழல் - வேய்ங் குழல். சின்னம் - சங்கு. குறிஞ்சிக் கிழவர் சிறுமி - வள்ளியம்மை.

25. இயமனுக்கு அஞ்சாமை கூறியவாறு. செந்தில் - திருச்செந்தூர். அந்தகா - இயமனே.

26. சிகண்டி - மயில். கோலக்குறத்தி - வள்ளியம்மை. குருநாதன் - முருகன். மரிப்பார் - இறப்பார்.

27. தூதர் - யமதூதர். சேலை - பட்டாடை. சீரா - அரைக்கச்சை. செச்சை - வெட்சி. கையில் சிவந்த செச்சைமாலை:

'பூந்தொடையல் சேர அணிந்த திருக்கரமும்' என்று கந்தர் கலிவெண்பாவிலும்; 'ஒருகை தாரொடு பொலிய' என்று திருமுருகாற்றுப் படையிலும் கையில் மாலையிருத்தலைக் குறித்தமை காண்க.

28. இங்ஙன் என்பது 27-ம் பாட்டிற் கூறியுள்ளவாறு. அருவுருவாகிய ஒன்று போலேயிருக்கும் பொருள்: 'ஏகத்து உருவும் அருவும் உரு அருவுமாகிப் பருவ வடிவம் பலவாய்' கந்தர் கலிவெண்பா.

29. கடம் - காடு. பணை - மூங்கில் - இங்குத் தோளைக் குறிக்கும். காமக்கடலைக் குறத்திபிரான் அருளால் திடசித்தமாகிய புணை கொண்டு கடந்தேன் என்றார்.

30. பதம் - கால். பாவையர் - பெண்டிர். சேல் - மீன். கொற்றம் - வெற்றி. மயூரம் - மயில். இறைவனை வாழ்த்துக என்றவாறு.

31. பொக்கக்குடில்-பொய்யாகிய (அழிவதாகிய) உடல். புண்டரீகம் - தாமரை. கழல் - திருவடி. வீடு - மோக்ஷம். சிந்து - கடல். சொக்கு - மா (வடிவாய் நின்ற சூரபதுமன்). கிரி - கிரௌஞ்சமலை. பின் இரண்டடிகளில் ஒலி நயம் காண்க.

33. 'காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி' வருதலின் 'முடியாப் பிறவிக் கடல்' என்றார். திருவள்ளுவர் 'பிறவிப் பெருங்கடல்' என்றது காண்க. மிடி - வறுமை. படி - உலகம். விதனம் - துன்பம். முருகன் திருநாமத்தைப் புகல்பவர் அடையும் பேறு கூறியவாறு.

34. பொட்டு - துளி. வெற்பு - மலை - கிரௌஞ்சம்.

35. பத்தி - பக்தி. வாரி - கடல். தரங்கம் - அலை. குருதி-இரத்தம். மெத்தி-மிகுந்து. குதிகொள்ள-தங்கும்படி.

சுட்டி - வேல். தரங்கொண்டு - தலையைக்கொண்டு - கொன்று என்றபடி. அமராவதி - தேவலோகம்.

36. கரிக்கோட்டு முத்து - யானைத் தந்தத்தினின்று தோன்றும் முத்து. பின் இரண்டடிகளை 30வது பாட்டோடு ஒப்பிடுக.

37. கண்டுண்ட - கற்கண்டுபோன்று இனிமையான. அயர்கினும் - உம்மை எதிர் மறை. கூளித்திரள் - பேய்க் கூட்டம். ராவுத்தன் - குதிரைச் சேவகன். மூன்றும் அடி - ஒலிக்குறிப்பு.

38. இப்பாடற்கருத்தோடு திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிய கோளறு பதிகக் கருத்தை ஒப்பிடுக.

39. வெற்பு நட்டு - மந்தரமலையை மத்தாக நட்டு. உரக பதி - வாசுகி. அம்பரம் - கடல். மதித்தான் - திருமால்.

40. செந்தூர் வயல் சேல்பட்டுப் பொழில் அழிந்தது என்க. கடம்பு - கடம்பமலர்மாலை. வேலை - கடல். அயன் - பிரமன்.

41. கண பணம் - கூட்டமான படங்கள் - பல தலைகளையுடைய ஆதிசேடன் என்றபடி. மாலோன் - திருமால்.

42. நிணம் காட்டும் கொட்டில் - தசையால் எழுப்பிய வீடு - உடல். குறச்சிறுமான் - வள்ளியம்மை. பதாம் புயம் - திருவடித்தாமரை. இறைவனை வணங்குதலே தலையின் தொழில் என்றவாறு. ‘ தலையே நீ வணங்காய்’ என்ற திருவங்கமாலை காண்க.

43. கவி - குரங்கு. கவியால் கடல் அடைத்தோன்- இராமன் - திருமால் என்றபடி. கட்செவி - பாம்பு. கட்செவி

யால் பணி அணிகோமான் - பாம்புகளை அணிகலனாகப்பூண்ட சிவபெருமான். கைகளின் தொழில் முருகனை நோக்கிக் கூப்பித் தொழுதலே என்றவாறு. 'கைகாள் கூப்பித் தொழீர்' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவங்க மாலையில் அருளியது காண்க.

44. நாலாறு கால்-ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு. ஆர்க்கையிட்டு - கட்டி. அகம் - உடல்.

45. தனக்கு இறைவன் சொன்ன உபதேசம் 'உரை உணர்வு அற்று இரு' என்பது. 'சும்மா இரு சொல்லற' என்று கந்தர் அநுபூதி 12ம் பாடலில் கூறியது காண்க. பூத வீடு - ஐம்பூதச் சேர்க்கையால் ஆகிய உடல். இருகோடு - இரண்டு தந்தங்கள். ஒரு கை - துதிக்கை. பூதரம் - யானை. ஏகாசம் இட்டு - (தோலைப்) போர்த்துக்கொண்டு. ஏகாசம்-உத்தரீயம். புராந்தகன் - முப்புரம் எரித்த சிவபெருமான். புராந்தகற்குக் குரு - சிவகுரு: 'பொன்னங்கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோன்' என்பது கந்தர் கலி வெண்பா. புராந்தகற்குப் பூதன் - சிவ குமரன். நிட்டூரம் - கோபம். சூர குலாந்தகன் - அரக்கர் குலத்தை அழித்தவன்.

46. சித்ர - அழகு பொருந்திய. தோயா - தோய்ந்து. நீயான ஞான விநோதம் - ஞானம் திருஉருவா என்றது கந்தர் கலிவெண்பா.

47. பத்தி-வரிசை. புவனம்-உலகம். கமலம்-தாமரை. சாகரம் - கடல். 'ஏனை ஆனந்தங்கள்போல மறுகுதலும் மாய்தலும், பின்னர் வருத்தம் செய்தலுமின்றி மேன்மேற் பெருக நிகழ்வதாம்' என்பார் பரமானந்த சாகரம் என்றார்.

நீலத் திரைக்கடலில் நெடுநாள் வாழ்வுதரும் அமுதம் கிடைக்கும்; இப்பரமானந்தக்கடலில் தித்தித்து (நிலேத்து) இருக்கும் அமுது கிடைக்கும் என்ற நயம் காண்க. "ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி" என்ற பெரியபுராணம் இங்கு அறிக.

48. பாதாம்புயம் - திருவடித்தாமரை. புத்தியை வாங்குதலாவது-பொறிவழிச் செல்லாது இறைவழிச் செல்லுமாறு செய்தல். அன்பாய் முத்தியை வாங்குதல்; சிந்தையிடை அரு அன்பும் என்றது பெரிய புராணம். சக்தி - வேல். குவடு - மலே - கிரௌஞ்சம். காங்கேயன் - முருகன். முருகனே! புத்தியைப் புறத்தே செல்லவிடாது உன் திருவடியிலே செலுத்திஞல் முத்தி பெறலாம். இம்முறையில் என் கடைமையைச் செய்யாமையால் யான் தவறிழைத்தேன் ஆயினேன். தேவர்கட்குத்தவறு இழைத்த சூரனே வேல் எடுத்து அழித்த நீ, செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமையாகிய குறையையுடைய என் மாட்டு என்ன செய்யப் போகிருய் என்று விரித்துக் கொள்க.

49. தொண்டர் குழாம் சார்க என்று கூறியவாறு செல்வம் நிலேயாமையும் உடன் கூறிஞர். அரசர் தொண்டரோடு பழகியவதனேக் கழறிற்றறிவார் மாட்டுக் காண்க. இந் நூல் 75,100ம் திருப்பாடல்களேயும் காண்க. தண்டு-காலாட் படை. தாவடி போய் - போர்க்குச் சென்று. கரி - யானே. பரி - குதிரை. திரிபவர்-அரசர். நீரில் பொரி-நீரில் எழுத்து. கோடியும் அல்ல பல கருதுப ஆதலின் நெடு நெஞ்சமே என்ருர்.

50. படிக்கும் திருப்புகழ் என்ருர் படித்து அறியவேண்டியது முருகன் புகழே யாகலின்; பெரும் பாம்பு - காளிங்கன். நடிக்கும் பிரான் - திருமால். ராவுத்தன் - குதிரை வீரன்.

51. நேடி - தேடி. சோறும் என்ற உம்மையால் கூறையும் கொள்க (கூறை - ஆடை). 'இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம்' என்ற சுந்தரர் செந்தமிழ் காண்க. வெந்தது-உணவு. பகிர்ந்து ஏற்றவர் - இட்டு உண்டவர். தொலை வழியிற் பொதி சோறு பெற்றமை: இறைவன் திருவருள் முற்றப்பெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பைஞ்ஞீலி யில் பொதி சோறு பெற்ற வரலாற்றையும், திருக்குருகா வூரின் அருகில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொதி சோறு பெற்ற வரலாற்றையும் நினைவு கூர்ந்தறிக.

52. சிகர அத்ரி - சிகரத்தையுடைய மலை, கிரௌஞ்சம்; பண்பாச நிருபகுமாரா எனக் கூட்டுக: பாம்பை அரையிற் கட்டிய சிவபெருமானுக்குத் திருமகனே. நிகர அட்சம் - தொகுதியான கண்கள். சங்க்ராமம் - போர். சங்க்ராம ........ ...............பட்சி துரங்க - படத்தையும் பலகண்களையுமுடைய பாம்புக்குப் பகையாகிய மயிலைப் போரில் குதிரைபோல நடத்துபவனே. துரங்கம் - குதிரை. குக - குகனே. ராட்சச பட்ச விட் சோப - அரக்கர்களுக்குக் கலக்கம் விளைவித்தோய். தீர - வீரனே. குணதுங்கனே - குணமேன்மையுடையோய். இறைவன் செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன், ஆகலின் செந்தமிழாற் பாடும் அவாவினை விரும்புகிறார். செந்தமிழாற் பாடிவரும் இவர் இம்முறையில் வரம் கேட்டது என்னையோ எனின், வடமொழியை மிகுதியாகப் பயின்று, வடமொழிக் கலப்புமிக்க பாடல்களையே இடைக்காலப் புலவர் பலர் பாடி வந்தமையாலும், தானும் அம் முறையைப் பின் பற்றியமையாலும் ஆம். இப்பாடலில் வேண்டுகோள் தவிர்த்த மற்றைச் சொற்களெல்லாம் வட சொற்களாகவே இருக்கின் றமை காண்க. இந்நூல் 21ம் செய்யுளும் இங்ஙனமேயுள்ளது. வடமொழி கலவாது தூயதமிழிலேயே எழுதவேண்டும் என்ற எண்ணம் தொன்று தொட்டுவந்ததேயாம்; புதுவதன்று.

53. குமரனைப் பாடுக, பொருளை ஈக; ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் என்றவாறு. இந்நூல் 57ம் பாடலையும் காண்க. 'தானம் இடுங்கோள்' என்று 16ம் பாட்டில் கூறி யதை எதுக்காட்டி வற்புறுத்துகிறார். கிலேசித்து-கலக்கத்தை யடைந்து.

54. சாகை - இறத்தல். கடல்மேல் இராமபிரான் அம்பு எய்த வரலாறு இவண் குறிக்கப்பெற்றது.

55. ஆங்காரம் - யான் என்னும் செருக்கு; 3ம் அடி யோடு 'ஓங்காரத்து உள் ஒளிக்குள் உள் ஒளியாய் ஐந் தொழிற்கு நீங்காத பேருருவாய் நின்றோனே' என்னும் கந்தர் கலிவெண்பா அடிகளை ஒப்பிடுக. தொழும்பு - தொண்டு.

56. குன்றெறிந்தோன் கவி - முருகன் புகழ் நூல்கள். இழியும் கவி - பிற நூல்கள்; நான்கு உறுதிப்பொருள்களையும் உணர்த்தாதவை. கற்கவேண்டிய நூல்களைக் கூறியவாறு.

57. புனச்சிறுமான் தருபிடி - மான் வயிற்றுதித்த பிடி போலும் வள்ளி. பிடி - பெண் யானை.

58. முதலடியில் முரண் தொடை நயம் காண்க. இக்கு-கரும்பு - மன்மதனுடைய வில். முல்லை - மன்மதனுடைய பாணம். சங்க்ராமம் - போர். வேள் - மன்மதன். விழியால் செற்றூர் - திருக்கண்ணால் அழித்தவர்-சிவபெருமான்.

59. பொங்காரம் - பொங்கும்படியான. வேலை - கடல். வேலை விட்டோன்-முருகன். முருகன் அருள்போலப் பிறர்க்கு ஈந்த பொருளும் உதவும் என்க. வங்காரம் - உலோகக்கட்டி-பொன். சங்காதமோ - நீங்காமல் கூடியிருக்குமோ என்றபடி.

60. புந்தி - புத்தி. காயம் - உடல். கிலேசம்-துன்பம்.

61. வரை-மலை. அவுணர் சிரம் - அரக்கர் தலை. வாரிதி-கடல். செற்ற - கோபித்த. புரையற்ற - ஒப்பில்லாத; 'தனக்குவமையில்லாதான்'—குறள். போதித்தது-'உரை உணர்வு அற்று இரு' என்பது இந்நூல் 45ம் பாடல்.

62. வெண்டலை - தலையோடு. அகிலம் - உலகம். மேரு-இங்குக் கிரௌஞ்ச மலையைக் குறிக்கும்.

63. பாதித் திருவுருப் பச்சென்றவர் - உமையொரு பாகன் - சிவபெருமான். தன் பாவனையைப் போதித்த நாதன் -பிரணவப் பொருளை மொழிந்தவன். சந்தித்தது - பொருந்தியது.

64. பட்டிக்கடா - எருமைக் கடா. அந்தகா-இயமனே. பார் - உலகம். அலாது - அல்லாமல். செவ்வேல் பெருமாள் - முருகன். சத்தி - வல்லமை.

65. வெட்டும் கடா - எருமைக்கடா. கூற்றன்-இயமன். கராசலம் - மலைபோலும் யானைகள். குலகிரி - கூட்டமாகவுள்ள மலைகள். கலாபம் - மயில் தோகை. மயூரத்தன் - மயிலை ஊர்தியாக வுடையவன்.

66. மின் - மின்னல். இறைவனிடத்தில் அன்பு இல்லார் ஆயின் அறிவான் ஆய பயன் இல்லை என்று ஈற்றடியில் கூறினர். வாலறிவன் நற்றாள் தொழாதலே கற்றதனாலாய பயனும் என்பது குறள்.

67. பெறுதற்கு அரிய பிறவி - மானுடப் பிறவி. பெற்றும் என்று உம்மை விரிக்க. மதகும்பம் - மத்தகம். கம்பம் - அசைதல். தறுகண் - அஞ்சாமை. சங்க்ராமம் - போர். சயிலம்-மலை (போன்ற யானை). சரசவல்லி - இனிய குணம் பொருந்திய கொடிபோன்றவள் - தெய்வயானை யம்மையார். கடகம் -

ஓர் அணி (கங்கணம்). கடகம் அணிந்த புயம் எனவும், அசலம் (மலை) போலும் புயம் எனவும் கூட்டுக.

68. சாடும் - குத்திக் கிழிக்கும். சமரம் - போர். சரணம் - திருவடிகள். கருதுப கோடியும் அல்ல பல ஆகலின் ஓடும் கருத்து என்றார். உகம் - காலம். சகம் - உலகம். கவுரி - உமை. பவுரி கொண்டாட - பாட; பவுரி - ஓர் பண். பசுபதி - சிவபெருமான். பரம் - மேல். அதீதம் - கடந்த நிலை.

69. தந்தை - சிவபெருமான். ஞானவாள் சாதித்தல் - பிரணவப் பொருளை மொழிதல். சத்தி - வல்லமை.

70. பயந்த - அஞ்சிய. செங்கோடன் - முருகன். மயூரம் - மயில்.

71. துருத்தி - உலையூது கருவி. கும்பித்து - பிராண வாயுவைச் சமப்படுத்தி யடக்கி. முதலிரண்டடிகளில், அஷ்டாங்க யோகத்துள் இரேசகம், பூரகம், கும்பகம் என்று மூன்று வகையாய்ச் சுவாசத்தை யடக்கியாளும் பிராணயாமம் என்னும் யோக முறையைக் கூறினார். சிவயோகம் - தசகாரியத்துள் ஒன்று; 'தன்னை இழவாது இறைவனது எல்லாமாம் தன்மையை உணர்ந்து அவனோடு இசைந்து நிற்கும் ஆன்மாவின் அனுபவநிலை' (உண்மை நெறி விளக்கம் - 5-ம் பாடல் காண்க). சிவயோகிகளே சிவபோகம் அடைவதற்கு உரியவர் ஆகலின் சிவயோகத்தைக் 'குருத்து' என்றார்.

72. சேந்தன் - முருகன். காந்தன் - கணவன். கந்தம் - நறுமணம்.

73. போக்கும் வரவும் - பிறப்பு இறப்புக்கள். மனோலயம் - மனவொடுக்கம்; "போக்கும் வரவும் நினைப்பும் மறப்பும் பகலும் இரவும் கடந்து, உலவா இன்பம் மருவுவித்து" என்ற ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகளின் அருள்வாக்கை ஒப்பிடுக.

74. அராப்புனை வேணியன் - சிவபெருமான். அரா - பாம்பு. வேணி - சடை. குரா - மலர். ஐவர்பராக்கு-பஞ்சேந்திரியங்களின் வயப்பட்டு உலக விஷயத்தில் அறிவு செலுத்துதல் என்றபடி. இராப்பகல் அற்ற இடம்-மோக்ஷம்.

75. படிப்பவர் தாள் முடித்தல் - அடியாரை வணங்குதல்; 'ஆசையொடும் அரன் அடியார் அடியாரை அடைந்திட்டுக்...............கும்பிட்டுத்............திரியே', 'திருவேடம் சிவனுருவேயாகும்............. நேசத்தால் தொழுதிடு நீ பாசத்தார் விடவே' என்ற சிவஞான சித்தியாரை அறிக. முசியாமல் - இளையாமல். மிடிக்கின்றிலை - வறுமையடையவில்லை.

76. வேதன்-பிரமன். தாடாளன்-மேன்மையுள்ளவன்.

77. சேல்வாங்கு கண்ணியர் - கயல்மீன்போன்ற கண்களையுடைய பெண்டிர். மால் வாங்கி - மயங்கி. பயோதரம் - கொங்கை. வெள்ளிமலை யெனவே கால்வாங்கி நிற்கும் களிற்றன்-வெள்ளை யானையையுடைய தேவேந்திரன். வேல்வாங்கி-வேலை எய்தவன் - முருகன். கழல் - திருவடி.

78. பணச்சாளிகை - பணப்பை. பணமும் பெண்டிரும் நோக்கி மயங்கி யிருப்பாரது அறிவின்மைக்கு இரங்கியவாறு.

79. சிந்தாகுலம் - மனக்கவலை. கொந்து - கொத்து.

80. மாகம் - வானம். தோகைப் புரவி - மயில் வாகனம். சுத்த நித்த முத்தி - அந்தமில் இன்பத்து அழிவில் வீடு. முத்தித் தியாகப் பொருப்பு - முத்தி தரும் சிவபெருமான். பொருப்பு-மலை. த்ரிபுராந்தகன் - முப்புரம் எரித்தவன். த்ரியம்பகன் - மூன்று கண்களையுடையவன். பாமகல்பாணி - உமை. பாலகன் - குழந்தை.

81. தாராகணம் - நக்ஷத்திரக்கூட்டம். தாய்மார் அறுவர் - கார்த்திகை மாதர் அறுவர். அரையிற்கட்டு - அரைக்கச்சை. சீரா - கவசம். அந்தகா - இயமனே.

82. தகடு - புறவிதழ். புண்டரீகன் - திருமால். நிட்டூரசினம் பொருந்தியவனே. சூர பயங்கரனே - சூரனுக்கு அச்சத்தை விளைவித்தவனே.

83. கலாபப் புரவி - மயில் வாகனம். மிசை - மேல். தளம் - சேனே. முருகன் பெருமையோடு வேலின் பெருமையும் உடன் கூறியவாறு.

84. மைவரும் கண்டத்தர் - கருமை நிறம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான். வாழ்த்துதலே வாயின் தொழில் ஆகலின் 'வாழ்த்தும் இந்தக் கைவரும் தொண்டு' என்றார். கைவரும் தொண்டு - தேர்ச்சிபெற்ற தொண்டு; 'வாயே வாழ்த்து கண்டாய்', 'வாழ்த்தவாயும்', 'பொழில் ஆரூரா என்றே போற்று நில்லே' என்ற அப்பர் வாக்கை அறிக. பைவரும் கேள் - துன்புறும் உறவினர். பதி - ஊரவர்.

85. யோகத்தைச் சாதிப்பாரை நோக்கி வீட்டையடைய எளிய உபாயம் கூறியவாறு. யோகமாவது இறைவனை அகத்தான் வழிபடுகையாகிய மார்க்கம். இஃது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று எண் வகைப்படும். நாசி - மூக்கு. மூலாதாரம் - ஆறு ஆதாரங்களுள் ஒன்று.

86. சக்ராயுதன் - திருமால். விரிஞ்சன் - பிரமன். சூலாயுதன் - சிவபெருமான். சுடர்க்குடுமி - ஒளி பொருந்திய கொண்டை. காலாயுதம் - சேவல்.

87. கண்ட தபோதனர் என்றும், வைகும் தபோதனர் என்றும் கூட்டுக. தபோதனர் - முனிவர்.

88. வணங்கித் துதிக்க அறியா மனிதர் - இக்காலத்தில் பலர் இருத்தல் கண் கூடு !! அவர்களோடு இணங்கில் குணம் கெடும் என்பார், தன் மேல் வைத்துக் 'குணம் கெட்ட துட்டனே' என்றார். "இனிச் சிவபக்தர்களோடு இணங்குக என்றது; அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலான்" என்ற சிவஞானபோதம் காண்க. 'கள்ளேன் நினது அடியாரொடு அல்லால்' என்ற மணிவாசகமும் அறிக. கொடி-காக்கை. பிணங்க - நெருங்க. அலகை - பேய். துணங்கை - 'முடக்கிய இரு கைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி யடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து.' பிசிதர் - அரக்கர். நிணம் - கொழுப்பு. விக்கிரமம் - மிக்க வீரம். நிர்மலன் - மாசற்றவன். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் என்றபடி.

89. பங்கேருகன் - பிரமன். பட்டோலை - குறிப்பெழுதும் ஓலை. பண்டு - முன். தளை - விலங்கு. பொங்கு ஓதம் - கடல். புலம்ப - ஒலிக்க.

90. மன்றாடி - சிவபெருமான். செங்கோடன்-முருகன். நான்முகன் - பிரமன்.

91. கருமால் - திருமால். செம்மான் மகள் - வள்ளியம்மை. முதலடியில் முரண்தொடை நயம் காண்க. மாகுலன்-வேடன். சேவல் கைக்கோளன் - சேவலைக் கொடிச் சின்னமாக உடையவன் என்றபடி. வானம் உய்யச்செற்ற என்று கூட்டுக. பொருமா-மாமரவடிவில் வந்த சூரபதுமன். தருமா-மாமரம். கன்னி-இளமை. பூகம்-பாக்கு. வாழ்த்துகை - வாழ்த்துதல். சால-மிகவும். முருகன் கொல்லனுக்கு (கருமான்) மருமகன்

என்றும், வேடன் என்றும், அவனே கைக்கோளன் (நெய்தல் தொழில் செய்பவன்) என்றும் கூறியதன் நயம் அறிக.

92. தண்டை அம் புண்டரிகம் - தண்டை அணிந்த தாமரை போலும் திருவடி. சண்ட தண்டம் - மிக்கவலிமை யுடைய சேனை. மண்டலம்-நாடு. அண்டர் அண்டம்-தேவர் உலகம். மண்டி மிண்ட-தாக்கி நெருங்க. கொண்டு-கொள்ளும் பொருட்டு. இப்பாடலில் எதுகை நயம் காண்க. இலக்கண நூலார் வழி யெதுகை என்பர். "மண்டலம் பண்டுண்ட" எனற யாப்பருங்கலக்காரிகை மேற்கோட்பாடலைக் காண்க.

93. மண்கமழ் உந்தி - மாட்சிமைபொருந்திய உந்தி; கமழ்தல் - தோன்றுதல்; உலகத்தைத் தோற்றுவிக்கும் பிரமன் பொருந்திய உந்தித்தாமரையுடைய எனினும் ஆம். வலம் புரி-சங்கு. வாவி-குளம். முருகனது கிண்கிணி ஒலியின் பெருமை கூறினர்.

94. ஏனல் - தினை. கிள்ளை - கிளிபோலும் வள்ளி. தாள் - திருவடி. வேட்டிலை - நீ விரும்பவில்லை. வள்ளை-கொடி. கெண்டை - மீன் - கண்ணைக் குறிக்கும். தோதகம்- வஞ்சகம். நித்திலம்-முத்து. வித்தாரம் - மிகுதி. மூரல் - பல், இந்நூல் 42ம் பாடலை ஒப்பிடுக. நெஞ்சே மூரலை வேட்டனையே, வள்ளியை வேட்டவன் தாளை வேட்டிலையே என்று இரங்கியவாறு. காமநுகர்ச்சி இல்லாத இறைவன் இங்ஙனம் வள்ளியை விரும்பியது ஏன் எனில் உலகில் இல்வாழ்க்கை நடப்பதற்கென்க. அது 'தென் பால் உகந்தாடும்' எனும் மணிவாசகத்துள் 'பெண் பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர், விண் பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ' என்பதால் அறியலாம். 'ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே' என்றார் நக்கீரரும்,

'போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்' 'அவ்வேடமெல்லாம் அருள்புரிதொழில்' என்பவை சிவஞான சித்தியார். எனவே மக்கள் பொருட்டே பெண்மையொடு பொருந்தினான் இறைவன் என்பது போதரும். பெண்ணின் வலையினின்று நீங்கி வீடு பெறுதற்கும் அவனருள் வேண்டி யிருக்கிறது. ஆகையால் வள்ளியை வேட்டவன் தாளை வணங்குக என்றார். இப்பாடலில் ளகரம் மிக்குப்பயின்று இருத்தல் காண்க.

95. சூகரம் - பன்றி. ஈன்றான் - திருமால்.

96. மயிலை நோக்கிக் கூறியது. வேல் - முருகவேள். ஓகை-உவகை-மகிழ்ச்சி. கதிர்-சூரியன். வடக்கில்கிரி-மேரு. கனகம் - பொன். சக்ரம் - வட்டம். திடர் - மேடு. கனகசக்ரத் திடர் - சக்ரவாளகிரி. இப்பாடலில் ககரதகரங்கள் மிக்குப் பயின்றிருத்தல் காண்க.

97. சேல் - மீன். வெற்பு - மலை. கலபி - மயில். பணாமுடி - (பாம்பின்) படம். ராசி - குவியல். காசினி - உலகம். பாலிக்கும் - காக்கும். மாயன் - திருமால். பணிலம் - சங்கு. மயிலின் வல்லமை கூறியவாறு.

98. நதிதனையன்ன - ஆற்றுப்பெருக்குப்போல இடையறாதுவருகிற. நாம்பால் பொதிந்தபொறி - உடல்.

99. காவிக் கமலம் - செந்தாமரை. கமலக்கழல் - கழல் அணிந்த தாமரை போலும் திருவடி. தூவி - மயில் இறகு.

100. போதம் - அறிவு. சிறை - சிறையினின்று என்றபடி. தொண்டர் தம்மோடு சேர்ந்ததும் பாசவினைவிலங்கு விட்டது; விடவே சிறையினின்று விடுகலைப்பட்டது என்க. அடியார் இணக்கமும் அவன் அருளாலேயேநிகழ்ந்தது என்றபடி.

---

உ

செந்திலாண்டவன் துணை.

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

### அவர்களால் ஏற்படுத்தப்பெற்றுள்ள தருமங்களின் விவரம்.

| நெ. | விவரம் | நிதி ரூபாய் |
|---|---|---|
| 1 | சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் .... | 15,000 |
| 2 | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த .... | 11,500 |
| 3 | திருவாங்கூர் மகாராசா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 4 | சேரமான் பொருமாள் தேவாரப் பரிசு ... | 5,000 |
| 5 | மூவர் தேவாரப்பரிசு சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் .... | 10,000 |
| 6 | ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதகாசிரியர் நியமிக்க ... | 60,000 |
| 7 | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ... | 30,000 |
| 8 | திருப்பனந்தாளில் தமிழ்க்கல்லூரி நிறுவ .... | 1,50,000 |
| 9 | இசைத்தமிழ்க் கல்விக்கு .... | 1,00,000 |
| 10 | திருப்பனந்தாளில் கால்நடை வைத்திய சாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் .... | 20,000 |

| | | |
|---|---|---|
| 11 | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு அன்னதானம் .... | 10,000 |
| 12 | இராமேச்சுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் .... | 10,000 |
| 13 | திருநள்ளாற்றில் ஆவணிமூலஅன்னதானம் .... | 3,000 |
| 14 | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் .... | 17,000 |
| 15 | திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி .... | 1,00,000 |
| 16 | திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை | ஏ. 44 செ. 22 நிலவரும்படி |
| 17 | திருப்பனந்தாள் மண்ணியாற்றில் கேதாரக் கட்டம் .... | 2,900 |
| 18 | திருப்பனந்தாள் மண்ணியாற்றில் அரிச்சந்திரக் கட்டம் ... | 3,000 |
| 19 | கும்பகோணம் மணிக்கூண்டு ... | 25,000 |
| 20 | தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ... | 21,000 |
| 21 | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் .... | 9,000 |
| 22 | மைசூர் மகாராசா தேவாரப் பரிசு .... | 5,000 |
| 23 | மாயூரத்தில் தேவாரப் பரிசு .... | 5,000 |
| 24 | சென்னை விவேகாநந்தா கல்லூரியில் சைவ சித்தாந்தக் கட்டளை .... | 10,000 |
| 25 | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தக் கட்டளை .... | 20,000 |

| | | | |
|---|---|---|---|
| 26 | ஸ்ரீ வைகுண்டம் தேவாரப் பரிசு | .... | 5,000 |
| 27 | மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு | .... | 10,000 |
| 28 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு | .... | 1,00,000 |
| 29 | ஸ்ரீகாசியில் மகாத்மாகாந்தியடிகள் நினைவு அன்னதானம் | .... | 5,000 |
| 30 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீகாசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு | .... | 1,50,000 |
| 31 | டாக்டர் சுவாமிநாதய்யர் நினைவுத் திருக்குறள் பரிசு சென்னை | .... | 3,500 |
| 32 | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு | .... | 1,000 |
| 33 | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி | .... | 3,000 |
| 34 | ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்ய மகேசுவர பூசை | .... | 10,000 |
| 35 | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் | ... | 4,000 |
| 36 | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி | .... | 1,000 |
| 37 | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு | .... | 3,500 |
| 38 | திருநெல்வேலியில் அபிராமி அந்தாதிப் பரிசு | .... | 3,500 |
| 39 | திருப்பனந்தாளில் தண்ணீர்ப் பந்தல் தருமம் | .... | 3,500 |

| | | |
|---|---|---|
| 40 | ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பகநிதி .... | 3,500 |
| 41 | சிதம்பரம் உயர்தரப்பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி .... | 35,000 |
| 42 | சிதம்பரத்தில் திருவாதிரை, ஆனி உத்திரம் நாட்களில் அன்னதானம் .... | 12,000 |
| 43 | இராமேச்சுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் .... | 3,500 |
| 44 | ஸ்ரீவைகுண்டத்தில் நூல் நிலையக்கட்டிடம் .... | 10,825 |
| 45 | பஞ்சாப் அகதிகள் நிவாரண நிதி .... | 5,000 |
| 46 | அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ... | 3,500 |
| 47 | ஸ்ரீகாசி கேதாரீஸ்வரர் கோவிலில் ஏழைகள் அன்னதானம் .... | 5,000 |
| 48 | ஸ்ரீவில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு .... | 3,500 |
| 49 | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம்போட .... | 7,500 |
| 50 | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு .... | 5,000 |
| 51 | திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் .... | 7,000 |
| 52 | 28வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் முதல் ஆண்டு உதவி நிதி .... | 5,000 |
| 53 | 30வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் உணவு நிதியின் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழக முதல் இரண்டு ஆண்டு மூலதனம் .... | 14,000 |

| | | |
|---|---|---|
| 54 | 28வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் நிதியின் திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம் | .... 5,000 |
| 55 | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் | .... 15,000 |
| 56 | மாளவியாஜீ பெயரால், கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக்கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை | ... 5,000 |
| 57 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் | .... 60,000 |
| 58 | பனசை மண்ணியாற்று சோமேசர் துறை கட்ட | .... 1,500 |
| 59 | ஸ்ரீவைகுண்டம் பெண்கள் உயர்நிலைக் கல்விக் கூடம் நிறுவ | .... 45,000 |
| 60 | ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி | ... 5,000 |
| 61 | பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு | .... 5,000 |

ஸ்ரீவித்யா பவர் பிரஸ், கும்பகோணம், 25—3—49.